# விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் - மட்டக்களப்பு மாவட்டத்தை மையமாகக் கொண்ட ஆய்வு

K.Ketheeswaran.
Department of Special Needs Education, The Open University of Sri Lanka.
ketheeswaran33@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய கல்விப்புலத்தில் விசேட தேவையுள்ள பிள்ளைகளின் அதிகரிப்பு எனும் பாரிய சவாலை எதிர் கொள்ளும் நாடுகளில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது, இந்நிலையில் விசேட கல்வி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது. இதன் காரணங்களாக இவ்வாய்வு, கடந்த 30வருடகால யுத்தம், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றாற் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றான மட்டக்களப்பு பிரதேசத்தின் விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடுகளை ஆய்வு செய்வதாக அமைகின்றது. ஆய்வுப் பிரதேசத்திற் காணப்படும் விசேட தேவையுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 6247 ஆக அதிகரித்துள்ளபோதிலும், விசேட கல்வி நிலையங்களில் 292 மாணவர்கள் மாத்திரம் உள்வாங்கப்பட்டுள்ளமை, கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்ற பிள்ளைகள் பாடசாலையை விட்டு வெளிவருகையில் சமூகத்திற்கு ஏற்றவர்களாக உருவாவதில் உள்ள சவால்கள் போன்றன ஆய்வுப் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. ஆய்வின் நோக்க மானது ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான பாடசாலைகளின் செயற்பாடுகளை அறிந்து, பாடசாலைகள் சமூகத்திற்கு ஏற்புடைய மாணவர்களை உருவாக்குவதில் சவாலாக அமையும் காரணிகளை இனங்கண்டு அவற்றிற்கான விதந்துரைப்புக்களை முன்வைத்தல் ஆய்வின் நோக்காக அமைகின்றது. ஆய்வின் நோக்கத்தினை அடையும் வகையில் வினாக்கொத்து, நேர்காணல், அவதானிப்பு ஆகிய தரவு சேகரிப்பு கருவிகளின் ஊடாக ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ்வாய்வானது அளவைநிலை ஆய்வாகக் காணப்படுவதுடன் எண் ரீதியானதும் பண்புரீதியானதுமான தரவுகளும் தகவல் களும் உள்வாங்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்படுவத னால் பண்பு மற்றும் அளவு என இரு தன்மைகளையும் கொண்ட ஆய்வாகக் கொள்ளப்படும். நான்கு பாடசா லைகள் நோக்க மாதிரிமுறையின் அடிப்படையில் தெரிவானது. நான்கு பாடசாலைகளில் இருந்தும் 40 மாணவர்கள், 40 பெற்றோர்கள் மற்றும் 20 ஆசிரி யர்கள் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். தெரி வான மாதிரிகளிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் Microsoft Office Excel மென்பொருளின் உதவியுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பகுப்பாய்விற்கமைய 100வீதமான மாணவர்களும் தமக்குப் பொருத்தமான கல்வி வழங்கப் படுவதாகத் துலங்கியதுடன் பாடசாலையில் வளங்கள் மற்றும் தரஉள்ளீகள் போன்றனவும் போதியளவு காணப்படுவதுவும் கண்டறியப்பட்டன. இருப்பினும், பெற்றோர்களின் பங்களிப்பு குறைவு, பெற்றோர்களின் விசேட கல்வி தொடர்பான அறிவுக் குறைவு (55வீதம்) பெற்றோர்கள் - விசேட பாடசாலைக்கிடையேயான தொடர்பு குறைவாகக் காணப்படுகின்றமை, பாடசாலைக்கான வளங்களைப் பெறுவதில் சவால்களும், விசேடத்துவம் பெற்ற, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் குறைவாகக் காணப்படுகின்றமை போன்றன பாரிய சவாலாகக் காணப் படுகின்றமையால் மேலும் மாணவர்களை உள்வாங்கி கல்விச் செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுப்பதில் பாடசாலைகள் தயக்கம் காட்டுகின்றன. இதனை ஈடுசெய்ய பெற்றோர்களுக்கு விசேட கல்வி தொடர்பான கல்வி வழங் கல், சமூகத்தினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல், சட்டம் ஒழுங்குகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் விதந்துரைக்கப்பட்டன.

**திறவுச்சொற்கள்-** விசேட கல்வி, சவால்கள், விசேட கல்வி நிறுவனங்கள்.

## 1. ஆய்வு அறிமுகம்

வரலாற்றுரீதியாக கல்வித்துறையில் முக்கியமான பங்கினைக் கொண்டு காணப்படும் ஒரு துறையாக விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கான கல்வி காணப்பட்டது.

ஏனெனில், அனைவருக்கும் வினைத்திறனான கல்வி என்ற இலக்கினை அடைவதில் பெரும் சவாலான விடயமாக அமைவது விசேட தேவையுள்ள பிள்ளைகளின் அதிகரிப்பாகும் [1]. இன்று உலகநாடுகளுக்கு முன்மாதிரியாக விளங்கும் ஐக்கிய அமெரிக்காவில் 14% வீதமான மாணவர்கள் விசேட தேவையுள்ளவர்களாக இனங்காணப்பட்டுள்ளார்கள் இது அமெரிக்க சனத் தொகையில் 10.2 மில்லியனாகக் காணப்படுகின்றது. மேலும், 2011ஆம் ஆண்டின் ஐக்கியநாடுகள் சபையின் ஆய்வு முடிவுக்கு அமைய உலகில் 15 வீதமானோர் விசேட தேவைகள் உள்ளோராகவும் அவர்களின் 80 வீதமானோர் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலேயே வாழ்கின்றார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது [2].

நவீன உலகின் மாறிவருகின்ற சமூக, கலாசார மாற்றங்களுக்கு ஏற்ப சமூகத்தின் சகல பிரிவினர்களுக்கும் சமமான கல்வியை வழங்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது. உலகக் கல்விச் சிந்தனையாக அறிவதற்குக் கற்றல், ஆக்குவதற்குக் கற்றல், ஆவதற்குக் கற்றல், கற்றலுக்கான கற்றல் போன்ற எண்ணக்கருக்கள் இன்றைய கல்வி இலக்குகளாக மாற்றம் பெற்றுள்ளன [3] இத்தகைய கல்வி நோக்கங்கள் அனைவருக்கும் வினைத் திறனான கல்வி என்ற நிலையை உருவாக்கியுள்ளது. அத்துடன் போட்டிச் சந்தையில் தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதுடன் நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரிக்கச் செய்து பொருளாதார விருத்திக்கு உதவக்கூடிய மானிட வளமாக மாற்றம் பெறவேண்டிய நிலை உருவாகியுள்ளதன் காரணமாக இன்று கல்வி மனித உரிமைகளில் பிரதான ஒன்றாக வலியுறுத்தப்படுகின்றது. [4] இவ்வாறு, கல்வியின் பரவலாக்கம், கல்வியின் தாராளமயமாக்கம் போன்ற செயற்பாடுகளின் மூலமாக கல்வி எல்லோரையும் சென்றடைய வேண்டுமென்று எதிர்பார்க்கின்றது. இதனைக் கருத்திற்கொண்டே சிறுவர் உரிமை சாசனத்தில் இலங்கை அரசு கைச்சாத்திட்டுள்ளது. இதற்கைமைய 5-14 வயதுக்கு இடைப் பட்ட மாணவர்களுக்கான கட்டாயக் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. [5]

விசேட தேவையுள்ள பிள்ளைகள், திறன்களை விருத்தி செய்வதற்குக் கல்வி, பயிற்சி, புனர்வாழ்வு மற்றும் போதனைகள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை உடையவர்களாவர் [6].

விசேட தேவையுள்ளோரின் கல்வி பயிலும் வயதெல்லை 3 தொடக்கம் 20 வரை என சட்டபூர்வமாக வரையறுக்கப்பட்டுக் காணப்படுகின்றது. (Maine Unified Social Education Regulation Birth to Twenty – 2013)

இச்சட்ட அமுலாக்கத்திற்கு விசேட கல்வி அல்லது ஒன்றிணைத்து கற்பித்தல் அவசியமாகின்றது. இருப்பினும், இலங்கையில் உள்ளடங்கற் கல்வியிலும்பார்க்க விசேட கல்விச் செயற்பாடுகளே அதிகம் காணப்படுகின்றன. இணைத்துக் கற்பித்தல் அல்லது உள்ளடக்கல் கல்வி என்பதனை இயலாமையுடைய மாணவர்களை சாதாரண அல்லது முறைசார் கல்விச் செயற்பாடுகளுடன் உள்ளடக்கிக் கற்பிக்கும் செயன்முறைக்கான தத்துவம் மற்றும் நடைமுறை என விளக்க முடியும் [1], [7], [8].

2006ஆம் ஆண்டில் இயலாமையுடையோரின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தில் "நீண்டகால உடல், உள, அறிவாற்றல் மற்றும் புலனுணர்வுக் குறைபாடுகளைக் கொண்ட நிலையில் அவ்வா றான தடைகளுடன், சமூகத்துடனான தலையீடு களின் போது சாதாரணமாகவும் சமூகத்தில் முழுமையாகவும் விளைதிறனுடைய வகையிலும் பங்குபற்றுவதற்கு அக்குறைபாடுகள் தடை ஏற்படும் எனக் கருதப்படும் பிள்ளைகளே இயலாமையுடையோர் ஆவர்" எனக் வரையறுக்கின்றனர்.

மாற்றுத்திறனாளிகள் இணைந்து சாதாரண மாணவர்களுடன் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கும்போது மாற்றுத்திறனுடைய மாணவர்கள் மீதான கவனிப்பு மிகக் குறைவாகவே காணப்படும். மாற்றுத்திறனுடைய மாணவர்கள் ஏனைய சாதாரண மாணவர்களை விடவும் மாறுபட்ட செயற்பாட்டை வெளிக் காட்டுபவர்களாகவே காணப்படுகின்றார்கள். அவர்களை விசேடமாகக் கவனித்துப் பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து, அவற்றிற்கு ஏற்ப கல்வியை வழங்குவதோடு புனர்வாழ்வு, தொழிற்பயிற்சி போன்றவற்றையும் வழங்க வேண்டியுள்ளது. இவ்வாறான கல்வியை சாதாரண மாணவர்களுடன் வைத்து வழங்குவ தென்பது சாத்தியமான விடயமல்ல. மேலும் மாற்றுத்திறனுடைய மாணவர்கள் பொதுவாக தங்கியிருந்து கற்றலை மேற்கொள்வது சிறந்ததாகக் கருதப் படுகின்றது. அத்துடன் மாற்றுத் திறனுடையோருக்குக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் விசேட கல்வி தொடர்பான பூரண அறிவை உடையோராகவும் இருத்தல் வேண்டும்.

விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்குக் கல்வி வழங்குவதற்குப் பல கல்வி நிறுவனங்கள் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. இந்நிலை மறைமுகமாக அங்கு

காணப்படும் விசேட தேவையுடைய மாணவர்களின் செறிவைச் சுட்டிக்காட்டுகின்றது. இவ்விசேட தேவையுள் ளவர்களை கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர் களையும் நாட்டின் பொருளாதாரத்தில் பங்கு கொள்ளச் செய்யும் வகையில் ஆய்வுப் பிரதேச விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான கல்வி நிறுவனங்கள் செயற்பட வேண்டியுள்ளது. இருப்பினும், 'இன்று விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி நிலையானது வலுவாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் அது உண்மையான தொழிற்பாட்டு நிலையைத் தழுவவில்லை. (Reddell & Weedon, 2009) என்று விமர்சிக்கப்படும் நிலை ஆய்வுப் பிரதேசத்திலும் காணப்படுகின்றது.

இலங்கையில் 125 இற்கு மேற்பட்ட விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான பாடசாலைகள் காணப்படுகின்ற போதிலும் [6] இவ்வாறான சவால்கள் அவற்றின் சிறப்பான செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றன.

சமூக சேவைகள் அமைச்சு விசேட தேவை உள்ள பிள்ளைகளுக்கான கல்வி நிறுவனங்கள் குறித்துப் பேசுகையில் 'பெற்றோர் தாமாகவே முன்வந்து தமது பிள்ளைகளை கல்வி நிறுவனங்களில் இணைப்பார்கள் இதனால் அப்பிள்ளைகள் தொழிற்பயிற்சிகளைப் பெற்று மற்றவர்களில் தங்கியிராது சாதாரண மாணவர்களுடன் இணைந்து வாழ்வர் என குறிப்பிட்டிருந்தார். இருப்பினும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 6247 விசேட தேவையுள்ள பிள்ளைகள் வாழ்கின்றார்கள் எனவும் இதில் பெருந் தொகையானோர் கல்வியைப் பெறமுடியாத நிலையிற் காணப்படுவதாகவும் மாவட்ட செயலகத்தின் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனுடையோர் கற்பதன் மூலமாக, சுயமான தொழில் புரிந்து வருமானம் ஈட்டுவதனால் மற்றவர்களுக்குப் பாரமாக இல்லாமல் தமது சொந்த உழைப்பினிலே வாழவும் இதனால் தேசிய வருமானத்தை உயர்த்தவும் மாற்றுத் திறனுடையோருக்கு கல்வி புகட்ட வேண்டிய அவசியம் கல்விச் சமூகத்தவர்களுக்கு உள்ளதை உணர்ந்து செயற்பட வேண்டும் [9]

அனைவருக்கும்கல்விஎன்றஇலக்கினைஅடைவதற்கு விசேட கல்வி அடிப்படையாகக் காணப்படுகின்றது. விசேட கல்விச் செயற்பாடானது இனம், மதம், சாதி, பால், பிரதேச வேறுபாடுகளைக் கடந்து முன்னெடுக்கப்படும் செயற்பாடாகக் காணப்படுகின்றமையால் இன்றைய இலங்கையில் ஒற்றுமையை வளர்க்க அவசியமாகின்றது.

விசேட தேவையுள்ள பாடசாலைகள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்கண்டு அவற்றை முன்வைத்தல் எதிர்காலத்தில் விசேட கல்வி நிறுவனங்கள் தொடர்பான தெளிவையும் நிறுவனங்கள் பயணிக்கவேண்டிய சரியான பாதையையும் தெளிவுபடுத்துவதாக அமையும். கல்வியில் இருந்து ஒதுங்கியிருக்கும் மாணவர்களை மீண்டும் கல்விச் செயற்பாடுகளில் உள்வாங்க உதவியாக அமையும். அத்துடன் கல்வி நிறுவனங்களிற் காணப்படும் வளங்கள், தொழினுட்பங்கள் தொடர்பான பிரச்சினைகளை வெளிக்கொணரவும் அடிப்படையாக அமைகின்றது.

## 2. இலக்கிய மீளாய்வு

இரண்டு பிரதான பரப்புக்களில் இலக் கிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது.

1. கோட்பாடுகள் தொடர்பான பகுதி
2. அனுபவரீதியான முடிவுகள்.

இலங்கையின் கல்வி வரலாறானது 2300 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டது. கல்வி வரலாற்றில் விசேட தேவைகள் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்ற போதிலும் 1912 ஆம் ஆண்டே இத்துறை ஒரு மையில் கல்லாகக் காணப்படுகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வரையறைக்கமைய உடல், உள ரீதியாகக் காணப்படும் நிலைமைகள் ஒருவர் தன் அன்றாடச் செயற்பாடுகளைச் செய்வதற்கு முழு அளவிலோ பகுதியளவிலோ இடர்படும் நிலை இயலாமை என வரையறுக்கப்படுகின்றது.

கோட்பாடுகள் ரீதியான இலக்கிய மீளாய்வில் விகோட்ஸ்கியின் சமூக கலாசாரக் கோட்பாடு அதன் பொருத்தப்பாட்டின்மை கருத்திற் கொண்டு தெரிவு செய்யப்பட்டது. 'கல்வியானது பிள்ளையின் உடலியற் காரணிகளிற் தங்கியிருத்தலாகாது அது பிள்ளையின் ஆற்றலுக் கோற்ப வழங்கப்படல் வேண்டும்' என்பது இவரது கோட் பாட்டின் விசேட தேவையுள்ள பிள்ளைகள் தொடர்பான சிறப்பம்சமாகும். (Vygotsky 1993).

2012ஆம் ஆண்டில் கொங்கொங் நாட்டில் மேற்கொண்ட ஆய்வுக்கமைய விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள் விசேட தேவையுள்ள மாணவர்கள் ஏனைய மாணவர்களால் விமர்சிக்கப்படுதல், விசேட பாடசாலை முறையில் ஏற்படும் சடுதியான மாற்றங்கள், 20% வீதமான அதிபர்களும் 50% வீதமான ஆசிரியர்களும் விசேட

கல்வித்துறையுடன் தொடர்பற்றவர்களாகக் காணப் பட்டமை, 10% வீதமான ஆசிரியர்கள் எதிர்மறையான அணுகுமுறையைக் கொண்டு காணப்பட்டமை போன்றன விசேட கல்வி நிறுவனங்கள் எதிர்நோக்கும் சவால்களாகக் காணப்பட்டன.

### 3. ஆய்வுப் பிரச்சினை

ஆய்வுப் பிரச்சினைகளாக 'ஆய்வுப் பிரதேசத்தில் விசேட தேவையுடைய பிள்ளைகளின் அதிகரிப்பு, விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களில் மிகவும் சிறு பகுதியான பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளமை, பிள்ளைகள் கல்வி கற்று சமூகத்திற்கு ஏற்றாற்போல் அமைவதில் சவால்கள் காணப்படுகின்றமை' போன்றன பிரதான பிரச்சினைகளாக அடையாளப்படுத்தப் பட்டன. இப்பரச்சினைகளுக்குத் தீர்வாக விசேட கல்வி நிறுவ னங்களின் சுமூகமான செயற்பாடுகள் அவசிய மாகின்றன.

### 4. ஆய்வு நோக்கம்

- ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் விசேட தேவை யுள்ள பிள்ளைகளுக்குக் கல்வி வழங்கும் கல்வி நிறுவனங்களின் விசேட தேவையுள்ள பிள்ளைகளின் கல்வி மீதான செயற்பாடுகளைக் கண்டறிதல்.
- விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் தகைமைகளையும் கல்வி நிறுவ னங்கள் கொண்டுள்ள வளங்களையும் கண்டறிதல்.
- விசேட கல்வி வழங்கும் கல்வி நிறுவனங்களின் வினைத்திறனான செயற்பாடுகளில் சமூகத்தினரின் பங்களிப்பினைக் கண்டறிதல்
- நிறுவனங்கள் கல்வி வழங்கல் செயற்பாடுகளில் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளை முன்வைத்தல்.

### 5. ஆய்வு வினாக்கள்

ஆய்வு நோக்கங்களை ஒவ்வொன்றாக அடையும் வகையில் ஆய்வு வினாக்கள் நோக்கங்களை அடிப்ப டையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

- ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களின் விசேட தேவையுள்ள பிள்ளைகளின் கல்வி மீதான செயற்பாடுகள் யாவை?
- ஆசிரியர்கள் கொண்டுள்ள விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்கான கல்வித் தகை மைகள் எவை?
- கல்வி நிறுவனங்கள் கொண்டுள்ள கற்றல் கற்பித்தல் சாதனங்கள் மாணவர்களுக்குக் கற்பிக்கப் பொருத்த மானவையா?
- கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கிடையிலான தொடர்புகள் எவை?
- விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களும் சமூகமும் எத்தகைய தொடர்புகளைக் கொண்டுள்ளன?
- நிறுவனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை? அதற்கான காரணங்கள் எவை? அவற்றை வெற்றி கொள்வதற்கான வழிமுறைகள் எவை?

### 6. ஆய்வு முறை

விசேட தேவையுள்ள பிள்ளைகளின் கல்வி தொடர் பாக ஆய்வு செய்யப்படுவதனால் இது ஒரு அளவை நிலை ஆய்வாகக் காணப்படுகின்றது. அத்துடன் பண்பு ரீதியானதும் எண்ரீதியானதுமான தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படுவதனால் அளவு மற்றும் பண்பு நிலை சார்ந்த ஆய்வாக அமைகின்றது.

தரவு சேகரிப்புக் கருவிகளாக வினாக்கொத்து, நேர் காணல், அவதானம் மற்றும் ஆவணங்கள் ஆகியன தெரிவு செய்யப்பட்டு அவற்றினூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வின் நோக்கம், ஆய்வுக் குடித்தொகை, ஆய்வு வள ங்கள் என்பனவற்றிற்கு அமைய ஆய்வுத் தரவு சேக ரிப்புக்கள் இடம்பெற்றது.

ஆய்வுக்கான மாதிரி எடுப்பு பொருத்தமான முறையில் அமையும்போதுதான் ஆய்வு பொருண்மை கொண்டதாக அமையும். (ஜெயராஜா.சபா, 2006) இதற்கமைய மாதிரிக் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவ்வாய்வுக்கான பாடசாலை மாதிரிகள் நோக்கமாதிரி முறையில் தெரிவு செய்யப்பட்டன.

ஆய்வுப் பிரதேசத்திலுள்ள விசேட கல்வி வழங்கும் பாடசாலைகள் நான்கு தெரிவு செய்யப்பட்டன.

- Y.M.C.A விழிப்புலனற்றோர் பாடசாலை.
- புகலிடம் மனவெழுச்சி குறைந்தோருக்கான பாட சாலை.
- தரிசனம் விழிப்புலன் அற்றோர் பாடசாலை.
- ஓசானம் மூளைவளர்ச்சி குறைந்தோருக்கான பாடசாலை.
- இப்பாடசாலைகள் மாதிரியாகத் தெரிவு செய்யப் படுவதற்கு நோக்க மாதிரி முறை பயன்படுத்தப்பட்டது.

ஆய்வுக்காக நோக்க மாதிரி அடிப்படையில் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட நான்கு பாடசாலைகளிலும் மொத்தமாக 147 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். அவர்க ளில் ஒரு பாடசாலைக்கு தலா 10 மாணவர்கள் விகிதம் 40 மாணவர்களும் அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் என 40 பெற்றோர்களும் பாடசாலைக்கு 5 ஆசிரியர்கள் விகிதம் 20 ஆசிரியர்களும் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். இவர்களின் தெரிவானது நிகழ்தகவற்ற மாதிரியாக அமைந்தது.

## தரவுப் பகுப்பாய்வு

ஆய்வுச் செயற்பாடுகளில் தரவுப் பகுப்பாய்விற்கு முன்பாகவும் பின்பாகவும் பல செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இருப்பினும் தரவுப்பகுப்பாய்வு பெறும் சிறப்பினை ஏனைய செயற்பாடுகள் பெறுவதில்லை.

ஆய்வின் நோக்கங்களில் குறிப்பிடப்பட்டதற்கமைவாக நான்கு நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வின் தரவுப்பகுப்பாய்வு இடம்பெறுகின்றது.

- ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்குக் கல்வி வழங்கும் நிறுவனங்களின் விசேட தேவையுள்ள பிள்ளைகளின் கல்வி மீதான செயற்பாடுகளைக் கண்டறிதல்.

மாணவர்களிடம் வினவியதற்கமைவாக 'நீங்கள் கல்வி கற்கும் நிறுவனம் உங்களுக்குப் பொருத்தமான கல்வியை வழங்குகின்றதா? இணைபாடவிதானச் செயற்பாடுகள் இடம்பெறு கின்றனவா? நேரடி அனுபவங்களைப் பெறும் வகையில் செயற்பாடுகள் இடம்பெறுகின்றனவா? மற்றும் தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றனவா? என்ற வினாக்களுக்கு 100 வீதமான மாணவர்களும் ஆம் எனப்பதிலளித்துள்ளார்கள். இதனை அட்டவணை-1 இல் விளங்கிக்கொள்ளலாம்.

அட்டவணை–1 இற்கு ஏற்ப நோக்கின் மாணவர் கள் தங்களது நோக்கில் தமக்கு வழங்கப்படும் கல்வியும் அதனோடிணைந்த செயற்பாடுகளும் 100வீதம் திருப்தியாக அமைவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்நிலை அவர்கள் நிறுவனத்தில் இணைக்கப்படும் வரை கல்வி, கல்விசார் செயற்பாடுகளில் இருந்து ஒதுக்கப்பட்டமையை மறைமுகமாக விபரிக்கின்றது. அத்துடன் நிறுவனங்களின் செயற்பாடுகளின் சிறப்பான தன்மை தெளிவுபடுத்தப்படுகின்றது. இருப்பினும், பிள்ளைகளின் பெற்றோர்களிடம் நிறுவனங்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் வினவப்பட்டதற்கிணங்க அவர்களின் துலங்கல்கள் பிள்ளைகளின் துலங்கள்களுடன் முரண்படுவதைக் வரைபடம்-01இல் காணலாம்.

**அட்டவணை-1** விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றிய மாணவர்களின் தரவுகளைக் காட்டும் அட்டவணை

| வினாக்கள் | ஆம் | | இல்லை | |
|---|---|---|---|---|
| | எண் | % | எண் | % |
| உங்களுக்குப் பொருத்தமான கல்வி வழங்கப்படுகின்றதா? | 40 | 100 | - | - |
| இணைபாடவிதானச்செயற் பாடுகள் இடம்பெறுகின்றனவா? | 40 | 100 | - | - |
| நேரடி அனுபவங்களைப் பெறும் வகையில் கல்விச்செயற்பாடுகள் இடம்பெறுகின்றனவா? | 40 | 100 | - | - |
| தொழிற் பயிற்சிகள் இடம்பெறுகின் றனவா? | 40 | 100 | - | - |

வரைபடத்திற்கமைய 25வீதமான பெற்றோர்கள் பிள்ளை களின் கல்வி நிலை தொடர்பில் மிகவும் திருப்தியடைவதுடன் 60வீதமான பெற்றோர்கள் திருப்தியடைகின்றதாகத் துலங்கியுள்ளார்கள். இருப்பினும், 15 வீதமான பெற்றோர்கள் திருப்தியடையவில்லை எனவும் துலங்கியுள்ளார்கள். இந்நிலை மாணவர்களின் துலங்கலுடன் முரண்படுவது கண்டறியப்பட்டது (உரு.1).




**உரு . 1** பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றோர்களின் துலங்கலைக் காட்டும் வரைபடம்

கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்குப் பொருத்தமான பரிகாரக் கற்பித்தல் முறை தொடர்பில் ஆசிரியர்களிடம் வினவப்பட்டதற்கமைய 85வீதமான ஆசிரியர்கள் பரிகாரக் கற்பித்தல் இடம்பெறுவதாகவும் 15வீதமான ஆசிரியர்கள் பரிகாரக் கற்பித்தல் இடம்பெறவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்கள். இதனை உரு. 2 விளக்குகின்றது. இவ்வரை படத்திற்கமைய 15வீதமான ஆசிரியர்கள் பரிகாரக்கற்பித்தலை மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது அத்துடன் 85வீதமான ஆசிரியர்கள் பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்கின்றமை விசேட கல்விச்

செயற்பாடுகளின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது.




**உரு. 2** ஆசிரியர்கள் பரிகாரக் கற்பித்தல் மேற்கொள்ளப்படும் வீதம்

- விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் தகைமைகளையும் கல்வி நிறுவனங்கள் கொண்டுள்ள வளங்களையும் கண்டறிதல்.

இரண்டாவது ஆய்வு நோக்கத்தினை அடையும் வகையில் வினவப்பட்ட வினாவின் அடிப்படையில் மாணவர்களுக்குத் தேவையான கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் தொடர்பில் வினவப்பட்டதற்கிணங்க 85வீதமான மாணவர்கள் போதிய வளம் கிடைக்கப்பெறுவதாகவும் 15வீதமான மாணவர்கள் அவ்வாறு கிடைக்கப்பெறவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர். இதனை அட்டவணை-02 இல் அவதானிக்கலாம்.

**அட்டவணை-2** வளங்கள் தொடர்பில் மாணவர்களின் கருத்து

| **வினா** | **படிநிலை** | **வீதம்** |
|---|---|---|
| உங்களுக்குத் தேவையான கற்றல் கற்பித்தல் வளங்கள் கிடைக்கப்பெறுகின்றனவா? | ஆம் | 85% |
| | இல்லை | 15% |

மேலும், ஆசிரியர்களிடம் வினவியதற்கமைய 100 வீதமான விசேட தேவையுள்ள மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான பயிற்சி பெற்ற ஆசிரியர்களாகவே காணப்படுகின்றமை பாடசாலைகளின் விசேட கல்விச் செயற்பாடுகளின் உறுதித் தன்மையைத் தெளிவுபடுத்துகின்றது.

ஆசிரியர்களின் பொதுக் கல்வித்தகைமைகள் தொடர்பில் நோக்குகையில் 15வீதமானோர் பட்டப்படிப்பினையும் 65வீதமானோர் டிப்ளோமா வையும் 15 வீதமானோர் உயர்தரத்தினையும் 5வீதமானோர் சாதாரண தரத்தினையும் நிறைவு செய்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களின் தர விபரத்தினை உரு. 3 இல் காணலாம்.




**உரு.3** ஆசிரியர்களின் கல்வித் தகைமைகள்

பட்டப்படிப்பை நிறைவு செய்த ஆசிரியர்களால் விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு இலகுவாகக் கற்பிக்க முடியும், டிப்ளோமாவினை நிறைவு செய்த ஆசிரியர்களால் ஓரளவு சிரமத்துடனும் கற்பிக்க முடியும். சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகியனவற்றை நிறைவு செய்த ஆசிரியர்களால் சிறப்பாகக் கற்பிக்க முடியாது. இருப்பினும் அவர்கள் பெற்றுக்கொண்ட சிறப்புப் பயிற்சிகள் அவர்களின் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவுவதாக அமையும்.

- விசேட கல்வி வழங்கும் கல்வி நிறுவனங்களின் வினைத்திறனான செயற்பாடுகளில் சமூகத்தினரின் பங்களிப்பினைக் கண்டறிதல்.

விசேட கல்வி தொடர்பில் பெற்றோர்கள் கொண்டுள்ள போதிய விளக்கம் தொடர்பில் வினவப்பட்டதற்கு 20 வீதத்தினர் போதிய விளக்கம் உள்ளது எனவும் 25 வீதத்தினர் ஓரளவு உள்ளது எனவும் 55வீதமானோர் போதிய விளக்கம் தமக்கு இல்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர். இதனைப் பின்வரும் உரு.4 இல் அவதானிக்கலாம்.




**உரு.4** விசேட கல்வி தொடர்பாக பெற்றோர்கள் கொண்டுள்ள விளக்கம்

பெற்றோர்களின் விசேட கல்விச் செயற்பாடுகள் தொடர்பான அறியாமை கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அமைகின்றது. இப்பிரச்சினை பல ரூபங்களில் அமைந்து காணப்படும்.

பெற்றோர்கள் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கள் தொடர்பில் வினவப்பட்டதற்கமைய 25வீதமான பெற்றோர்கள் உதவிகளை வழங்குவதாகவும் 75 வீதமான பெற்றோர்கள் உதவிகள் எதனையும் வழங்குவதில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது. இந்நிலை பெற்றோருக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் இடையே காணப்படும் பாரிய இடைவெளியினை சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது.

- நிறுவனங்கள் கல்வி வழங்கல் செயற்பாடுகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளை முன்வைத்தல்.

நிறுவனம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வினவப்பட்டதற்கமைய, உரு.5, பிள்ளைகள் தங்கியிருந்து கல்வி கற்கையில் சிறந்த பெறுபேற்றைக் காட்டுவதாக 95வீதமான ஆசிரியர்கள் தெரி வித்துள்ளார்கள் மீதி 5வீதத்தி னர் மாத்திரமே இல்லை எனவும் துலங்கியுள்ளனர். விசேட கல்வி நிறுவனங்களில் காணப்படும் விடுதி வசதியின்மைபாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.




**உரு.5** தங்கியிருந்து கல்வி கற்பதன் நன்மை தொடர்பான ஆசிரியர்களின் கருத்துகள்

மேலும், ஆசிரியர்களின் ஊதியப்பிரச்சினைகள், பெற்றோரின் பங்குபற்றல் பிரச்சினைகள், சாதாரண பாடசாலைகள் ஈடுபாடு காட்டாமை, நிதிப் பற்றாக்குறை, மாணவர்களை உள்வாங்குவதில் பிரச்சினைகள் போன்ற பிரச்சினைகள் தொடர்பான தகவல்கள் நேர்காணலின் மூலம் பெறப்பட்டன.

அவதானத்தின்போது பிள்ளைகளின் பாதுகாப்புச் சிறப்பாக அமைந்திருந்தது. மாணவர்களுக்கான தொழிற் பயிற்சிகள் ஏனைய சமூக நிறுவனங்களின் உதவியுடன் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. மாணவர்களின் விளையாட்டுத்திறன் முக்கியப்படுத்தப்படுகின்றது. தளபாட வசதிகளில் பிரச்சினைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மாணவர் மையக்கல்வி முறை சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. மாணவர்களின் வரவு சீராகக் காணப்ப டுகின்றமை போன்ற விடயங்கள் அவதானத்தின்போது கண்டறியப்பட்டன.

## 8. முடிவுகளும், விதந்துரைப்புக்களும்

ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களான ஓசானம், புகலிடம், தரிசனம் மற்றும் Y.M.C.A வாழ்வோசை ஆகிய நிறுவனங்கள் தமது கல்விச் செயற்பாடுகளில் 100% வீதமான மாணவர்கள் திருப்பதியைக் கொண்டுள்ளதாகப் பகுப்பாய்விற் கண்டறியப்பட்டது.

மாணவர்களின் விசேட தேவைகளை அறிந்து அவர்களில் விசேட கவனஞ் செலுத்திக் கற்பிப்பதற்குச் சாதாரண பாடசாலைகளை விடவும் விசேட கல்வி நிறுவனங்கள் சிறந்தவை. ஏனெனில் தொழிற்பயிற்சிகளையும் வழங்கி சமூகத்திற்கு ஏற்றவகையில் பிள்ளைகளை மாற்றியமைக்கின்றன. 15% வீதமான பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் திருப்தியற்ற நிலையிற் காணப்படுகின்றார்கள். இந்நிலையும் மாற்றியமைத்தல் எதிர்காலத்தில் நன்மைபயக்கும்.

மாணவர்கள் மிகவும் விருப்புடன் கல்விபயிலும் நிலை கண்டறியப்பட்டது. விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் மாணவர்களின் கல்விச்செயற்பாடு சிறப்படைகின்றது. இருப்பினும் 20% வீதமான ஆசிரியர்கள் விசேட பயிற்சிகளைப் பெறாத ஆசிரியர்களாகக் காணப்படுகின்றமை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் எனவே அனைத்து ஆசிரியர்களுக்கும் முழுமையான பயிற்சிகள் வழங்குதல் அவசியமாகின்றது.

55% வீதமான பெற்றோர்கள் விசேட தேவை யுள்ள பிள்ளைகள் தொடர்பாக விளக்கமெதுவும் இன்றிக் காணப்படுகின்றார்கள் இவர்களுக்கு விளக்கத்தினை ஏற்படுத்தி பிள்ளைகளின் உரிமைகள், அவர்களில் மறைந்துள்ள திறன்கள், அவர்களுக்குக் கல்வி வழங்குவதன் நன்மைகள் போன்றனவற்றைத் தெளிவுபடுத்தல் அவசியமானதாகும். இது குறுங்காலக் கற்கை நெறியாகவோ அல்லது நீண்டகாலச் செயற்பாடாகவோ அமையலாம்.

விசேட தேவையுள்ள பிள்ளைகள் தொடர்பான வெளிச் சமூகத்தினரது எண்ணப்பாட்டினை மாற்றியமைத்தல் அவசியமானதாகக் காணப்படுகின்றது. சில விசேட கல்வி தொடர்பான எடுத்துக்காட்டுக்களைச் சமூகத்தில் முன்வைப்பதன் மூலம் சமூகத்தவர்களை ஒருங்கிணைக்க முடியும். இச்செயற்பாடு விசேட தேவையுள்ள பிள்ளைகளைச் சமூகம் ஏற்றுக் கல்விவழங்கும் நிலையைத் தோற்றுவிக்கும்.

அனைத்துப் பிள்ளைகளையும் உள்வாங்கி கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான வளங் களைப் பெற்றுக்கொடுத்துக் கல்வி நிறுவனங்களை ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

விசேட கல்வி ஆசிரியர்களுக்கு அடிப்படை தகை மையை வரையறுத்து அதனைச் சட்டமாக்கல் வேண்டும். இதன் மூலம் சிறப்பான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

95% வீதமான ஆசிரியர்களின் கருத்திற்கமைய விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களில் விடுதிவசதிகளை 100% வீதமான மாணவர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

மாவட்டத்திற் காணப்படும் 6247 விசேட தேவையுள்ள மாணவர்களையும் விசேட பாடசாலைகளில் இணைப் பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்

விசேட தேவையுள்ள பிள்ளைகளுடன் தொடர்புறும் அனைத்து சமூக நிறுவனங்களும் ஒழுங்கமைக்கப்படும் பொழுது விசேட தேவையுள்ள பிள்ளைகளின் பங்கு பற்றல் தேவையினைக் கருத்திற்கொண்டு அங்கு ஒழுங் கமைக்கப்படும் பௌதிக வளங்கள் மற்றும் மனித வளங் களை ஒழுங்கமைத்தல் கட்டாயமாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தல் சமூகத்தினரிடையே விசேட தேவையுள்ளோரை ஏற்றுச் செயற்படும் மனப்பாங்கினை விருத்தியாக்கும்.

**உசாத்துணைகள்:**

1. Bryant, D. P., Smith, D. D., & Bryant, B. R. "Teaching Students with Special Needsin Inclusive Classrooms" Boston, MA: Pearson Education, Inc, 2008.
2. United Nations, "Including the rights of persons with disabilities in United Nations programming at country level". A Guidance Note for United Nations Country Teams and Implementing Partners, 2011.
3. 200 EFA Global Monitoring Report, 2 . "Education for All IS THE WORLD ON TRACK", the United Nations Educational, Scientific and Cultural Organization, 7, Place de Fontenoy, 75352 Paris 07. ISBN 92-3-103880-X, 2002
4. http://www.upi.com/Health_News/2008/03/05/14-percent-of-US-kids-with-special-needs/UPI-93651204755296, 2000
5. http://www.un.org/disabilities/documents/iasg/undg_guidance_note.pdf, 1999
6. சிவகுமார்.த, "விசேட கல்வி அறிமுகம் பிரயோகங் களும்", கக்ஸ்றொன் பிறிண்டேர்ஸ், கல்வியங்காடு 2010.
7. Lipsky, D. K. & Gartner, A. *Inclusion and school reform: Transforming America's Classrooms*. Baltimore, MD: Brookes Publishing Co, 1997.
8. Rogers, J.*The inclusion revolution. Research Bulletin*. No. 11. Bloomington, IN:Delta Kappan, Centre for Evaluation, Development, and Research. May, 1993.
9. சந்தானம்.எஸ், "கல்விசார் அறைகூவல்கள்", சாந்தா பப்ளிசர்ஸ், சென்னை, 1999.
10. ஜெயராஜா.சபா, "ஆய்வு முறைமையியல்", கல்வி ஆய்வுக் கழகம், யாழ்ப்பாணம், 2000.